**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**TIRUVANNAMALAI.**

**MCOP.No. 475 /2023**

**PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | மகாலட்சுமி |
| **Father's Name/Husband's Name** | : | சதீஷ்குமார் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 11.03.2025.**

**முதல் விசாரணை**

இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன்.அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை என்றும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்று உறுதியிட்டு கூறுகிறேன்.

எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) தாம்பரம் காவல் நிலைய குற்ற எண். 359/2023 ன் முதல் தகவல் அறிக்கை காவல்துறை இணையதள நகல் – ம.சா.ஆ.1

2)AP39UE6147 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை காவல்துறை இணையதள நகல் – ம.சா.ஆ.2

3)TN32AM1109 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை காவல்துறை இணையதள நகல் – ம.சா.ஆ.3

4) இறந்த சதீஷ்குமாரின் பிரேத பரிசோதனை சான்றிதழ் – ம.சா.ஆ.4

5) தாம்பரம் காவல் நிலைய குற்ற எண். 359/2023 ன் குற்ற இறுதி அறிக்கை காவல்துறை இணையதள நகல் – ம.சா.ஆ.5,
6) என் கணவரின் இறப்பு சான்றிதழ் இணையதள நகல் – ம.சா.ஆ.6
7) என் கணவரின் வாரிசு சான்றிதழ் இணையதள நகல் – ம.சா.ஆ.7

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) விபத்து 09.07.2023 தேதியன்று காலை 7.30 மணியளவில் நடந்தது. 2 வது மனுதாரர் செல்வம் எனது மாமனார். 3 வது மனுதாரர் செல்வி எனது மாமியார். என் கணவருடன் பிறந்த ஒரு தம்பி உள்ளார். என் கணவர் இறந்ததிலிருந்து நான் என் அம்மா வீட்டில் தான் இருக்கிறேன். 2, 3 மனுதாரர்கள் என் கணவரின் தம்பியுடன் தான் தற்போது வாழ்ந்து வருகிறார்கள். என் கணவர் விபத்து சமயத்தில் கட்டுமான தொழில் செய்து வந்தார் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஓட்டுனர் உரிமம் இன்றி கவனக்குறைவாக என் கணவர் ஓட்டியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் கணவருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்தது. என் கணவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C. Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**

**<u>MCOP.No. 475 /2023</u>**

**PW2**

| | | |
|---|---|---|
| **Name** | : | சரவணன் |
| **Father's Name/Husband's Name** | : | செல்வம் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 11.03.2025.

**முதல் விசாரணை-**

இந்த மனுவில் 3 ம் தரப்பினர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன்.அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை என்றும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்று உறுதியிட்டு கூறுகிறேன்.

## 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை –

இறந்த சதீஷ்குமார் என் அண்ணன். நான் சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் 4 வருடங்களாக வேலை செய்து வருகிறேன். விபத்து நடந்தபோது நான் அவர் பக்கத்தில் இருந்தேன். என் அண்ணன் ஓட்டி சென்ற வண்டியின் பதிவு எண் என்னவென்று எனக்கு தெரியாது. என் அண்ணன் மீது மோதிய லாரியின் பதிவெண்ணும் எனக்கு தெரியாது. என் அண்ணன் ஹெலமெட் போடாமலும் சாலை விதிகளை கடைபிடிக்காமலும் தாறுமாறாக ஓட்டியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இறந்தவர் என்னுடைய அண்ணன் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C. Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**